# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,965 — 1942 ம் ஞூ ஆடிமீ 10 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

PART IV.—நாலாம் பாகம்.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் யாலகலே-மாவத்தகம் கிராமச் சங்கத் தெரு வெட்டல் என்னும் பகிரங்க வேலைக்கு வேண்டியதான பின்னாச் சொல்லப்படும் காணியை, அஃதாவது —

பிரதமபட்டது இல. A 1,420 குறிச்சி—மாவத்தகம்

| துண்டு | காணியினது பெயர் | விபரம் | உரித்தாளியின் பெயர். | விசாலம் ஏ. றூ. ப. |
| --- | --- | --- | --- | --- |
| 1 | கொட்டபொறகாலந்தவத்த | 20 வயதுள்ள 28 றப்பர் மரங்களும், 3 வயதுள்ள 4 றப்பர் மரங்களும் ஒரு வயதுள்ள ஒரு றப்பர் மரமும், 40 வயதுள்ள 3 தென்னைகளும், 10 வயதுள்ள 3 றுக்குட்டான் மரங்களும், ஒரு தெல்மபு மரமும், 5 வயதுள்ள ஒரு பஞ்சுமரமுமுள்ள றப்பர் தோட்டம் | கலதொட்ட மாவத்தகம் வாசியான மத்துமாகே அவனேறிஸ் பெறேரு | 0 0 14·1 |

எடுத்துக்கொள்வதற்கான எற்றன்ஞுசெய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் நியமித்த தத்துவத்தின்படி சனாதிகார மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிப்படுக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1942 ம் ஞூ (ஓகஸ்ற்) ஆவணி மாதம் 5 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்த தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1942 ம் ஞூ (ஜூலை) ஆடிமீ 6 ந் உ.

ஜீ. ஆர். டபிள்யு. த சில்வா,
களுத்துறை மேல் உதவி அரசாட்சி ஏசண்டு.

77——J. N. A 14197—45 (7/42)

T 1

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிராமம் பெருப்பிப்பதற்காகவும், குடியேற்றுதற்காகவும் ... தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபட்டத்து இல. A 639 குறிச்சி—லக்கல

| துண்டு. | காணியின் பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர் | விஸ்தீரணம் ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | இராச சந்தோஷவெளி | நெற்காணி | கேற முதலியார் ஸ்ரீ ராச கனகசபை | 52 2 19 |
| 2 | ஷ்டி | காடு | ஷ்டி | 22 0 23 |

எடுத்துக்கொள்வதற்கான ஏதத்னஞ்செய்யும்படி (203) ம் அதிகாரம் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் சுய ஆட்சிக் கமிட்டிக்கு நியமித்த தத்துவத்தின்படி அக்காணிகளை ஆட்சிப்படுத்திக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1942 ம் ஞூ (ஒகஸ்ற்) ஆவணி மாதம் 5 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு மட்டக்களப்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளின் தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்புக் கச்சேரி,
1942 ம் ஞூ (ஜூலை) ஆடி மீ 7 ந உ

வீ. எல் வீரசிங்ஹ,
உதவி அரசாட்சி ஏசன்று, மட்டக்களப்பு.

---

## சுப்பிறீங் கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : மத்திய மாகாண நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் கண்டி டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினல் வழக்கு விசாரணை, 1942 ம் ஆண்டு (ஆகஸ்ட்) ஆவணி மாதம் 3 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகரும் முள்ளவர்கள் எல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,

பிஸ்கால் கந்தோர், கண்டி,
1942 ம் ஞூ (ஜூலை) ஆடி மீ 4 ந உ.

ா. ரீ. டைசன்,
மத்திய மாகாண பிஸ்காலுக்காக.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.